திரு. க. அருணாசலம் : 'இன்டியன் கவுன்சில் ஆஃப் யோகா' என்ற நிறுவனத்தின் தலைவர் திரேந்திர பிரம்மச்சாரி இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி செய்ய உதவி செய்து வருகிறார்கள். அவர்களுடைய உதவியை நம்முடைய மாநிலத்தில் பயன்படுத்தி, தனிப்பட்ட முறையில் மதுரை, கோயம்பத்தூர் முதலிய நகரங்களில் அங்குள்ள மெடிக்கல் காலேஜுகளை யொட்டி யோக நிலைப் பயிற்சி நிலையங்களை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : திரேந்திர பிரம்மச்சாரி பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அவரைப்பற்றிய முழு விவரமும் எனக்குத் தெரியாது. ஆனால் நம் மாநிலத்தில் யோக நிலைப் பயிற்சி என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறை. பல்வேறு நிபுணர்கள், 'எக்ஸ்பெர்ட்ஸ் இன் டையபெட்டோலாஜிஸ்' எல்லாம் இதிலே கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தப் பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் பல்வேறு நோய்கள், குறிப்பாக டையபெட்டிஸ் நோய் களையப்படும் என்று ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்போதே இதற்கான பயிற்சிக்குரிய சாத்தியக்கூறுகள் நம் மாநிலத்தில் இருக்கின்றன. ஆனால் இதை முழுமையான அளவில் பரவச் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யும்.

திருவாரூர் வ. சோ. ஆண்கள் உயர் நிலைப் பள்ளி.

* 168 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் வ. சோ. (ஆண்கள்) உயர் நிலைப் பள்ளிக்குப் பக்கத்தில் இருக்கும் சூரியன் குளத்தைத் தூர்த்து விளையாட்டு மைதானமாக்கித் தரப்படும் என அரசு உறுதியளித்திருந்ததா ?

(இ) அப்பணிக்கென ஒதுக்கப்பட்ட தொகை அக்குளத்தைத் தூர்க்க போதுமானதாயில்லை என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அப்பணிக்குக் கூடுதல் தொகை ஒதுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

1981 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்கள் இவ்விளையாட்டு மைதானத்தை சமன்படுத்த ரூ. 95,000-க்கு மதிப்பீடு தயாரித்துள்ளார். இந்த மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : விளையாட்டு மைதானமாக இருந்த இடத்தில் மருத்துவமனையைக் கட்டி அதை மருத்துவத் துறை எடுத்துக்கொண்டது. இது நடைபெற்று ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அது மிகப் பெரிய ஒரு பள்ளி. இன்றைக்கு விளையாட்டு மைதானம் இல்லாமல் அந்தப் பள்ளி இருந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே நான் இந்தப் பிரச்சினைபற்றி இதே அவையிலே கிளப்பியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்போது இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குளத்தின் கரைகளை மட்டும் கட்டினால் போதாது ஒதுக்கப்பட்ட தொகை அக்குளத்தைத் தூர்க்கப் போதுமானதாக இல்லை என்று மறுபடியும் அரசுக்குக் குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. ஐந்து ஆண்டுகளாக மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். விளையாட்டு மைதானத்தை மருத்துவத் துறை எடுத்துக்கொண்டதால், இப்போது அதை நல்ல முறையில் தூர்த்து அது சம்பந்தப்பட்ட வேலையைச் செய்து கொடுக்க வேண்டியதும் மருத்துவத் துறையினுடைய வேலைதான். ஆகவே இந்த வேலை உடனடியாக மேற்கொள்ளப்படுமா ? இதிலே என்ன சங்கடம் இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : முதலிலே இதற்காக 42 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. In G.O. Ms. No. 2576, Health, dated 2nd November 1970, an expenditure of Rs. 42,000 was sanctioned for filling up the Sooriyankulam tank so as to make it fit for use as playground for the V. S. Boys Higher Secondary School. ஆனால் அந்தப் பள்ளியினுடைய தலைமையாசிரியர் "நாங்கள் அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு குளத்தைத் தூர்த்து விட்டோம். ஆனால், இன்னும் ஒரு அடி உயர்த்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். 1970 ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசு மருத்துவத் துறை அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. முதலிலே இவ்வளவு செலவு செய்தால் போதும் என்று சொன்னார்கள். அதற்காக 42 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி, குளத்தை நிரப்பிவிட்டார்கள். பிறகு இன்னும் ஒரு அடி கூட உயர்த்த வேண்டுமென்று வாதாடினார்கள். அதன் பிறகு 39 ஆயிரம் ரூபாய் சேங்ஷன் செய்து அதற்கான உத்தரவு போட்டு, அந்தத் தொகையைச் செலவு செய்து குளத்தை

நிரப்பினார்கள். இப்போது மூன்றாவது முறையாக அது கூடப் போதாது; மருத்துவமனை எந்த அளவுக்கு உயரத்தில் உள்ள பூமியில் இருக்கிறதோ அதே அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். மருத்துவமனை இருக்கிற கிரவுண்ட் லெவலுக்கு இதை உடனடியாகச் செய்ய முடியாது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. மாணவர்களுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் அந்த கிரவுண்ட் லெவல் செய்யப்படும். மாணவர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் அதைச் செய்து கொடுப்போம். முதலிலேயே அவர்கள் இந்த வேலைக்கு இவ்வளவு தொகை தேவை என்று சொல்லி கான்டிராக்ட் விட்டிருந்தால், இத்தகைய பிரச்சினையே எழுந்திருக்காது. இப்போது 'ஸ்டெப் பை ஸ்டெப்' அவர்கள் கிரவுண்ட் லெவலை 'இன்கிரீஸ்' பண்ண வேண்டுமென்று கேட்பதனால் தான், பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கம் எனக்கு ஓரளவு திருப்தியை அளிக்கிறது. ஆனால், நான் சொல்ல வந்தது அந்த மருத்துவமனை அங்கே கட்டப் படுவதற்கு முன்பு அந்த மைதானம் எந்த அளவு உயர்ந்திருந்தது என்பதைத் தான். அந்த மைதானத்திலே மருத்துவமனை கட்டப்பட்ட காரணத்தால், அந்த மருத்துவமனையிலிருந்து வரக்கூடிய கழிவுப் பொருள்கள் எல்லாம் விளையாட்டு மைதானத்தில் வந்தால், அதை எப்படி விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்த முடியும்? அதுபற்றி முன்பே அரசுப் பொறியாளர்கள் ஆய்ந்து அறிந்து நல்ல முறையில் செய்திருக்க வேண்டும். அவர்கள் அதற்குரிய தொகைக்கு ஒரே நேரத்தில் முன்பே செங்ஷன் கேட்டிருக்க வேண்டும். ஆகவே, தவறு பள்ளிக்கூட நிர்வாகிகளுடையது அல்ல. தவறு அதிகாரிகளுடையது. ஆகவே, இதை உடனடியாகச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "ஓரளவு திருப்தியை அளிக்கிறது" என்று சொன்னதற்காக உள்ளபடியே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களிடமிருந்து கொஞ்சம் பாராட்டை வாங்கினாலே அது பெரிய பாராட்டிற்குச் சமம். திரும்பவும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் அது நிறைவேற்றப்படும்.

It is also proposed to provide brick-block rivetment to 1:2 slope in the eastern side to avoid sloping and erosion. The estimate is priced to the current Schedule of Rates for 1980-81 with provision

for 10 per cent extra towards escalation of rates for 1981-82. This upgraded estimate approved by the Chief Engineer is under the active consideration of the Government.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் வீட்டின் முன்பு நடைபெற்ற தாக்குதல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 23—3—1981 அன்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவருமான கலைஞர் அவர்களது வீட்டின் முன்பு ஒரு கூட்டம் நுழைய முயன்று அங்கிருந்த ஊழியர் ஒருவரையும் தாக்கி வன்முறையில் ஈடுபட்டதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ம. சங்கரலிங்கம்** : தலைவரவர்களே, 23—3—1981 அன்று மாலை சுமார் 4 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களது வீட்டின் முன்பு ஒரு கூட்டத்தினர் நுழைய முயன்று அங்கிருந்த ஊழியர் ஒருவரையும் தாக்கி வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். அதுவும் ஒரு கட்சியினுடைய பிரச்சாரகராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு அம்மையாருடைய தலைமையில் 12 பேர் சேர்ந்து அங்கு ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். அந்த வீட்டிலே சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் என்கிற நிலையில் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அரசு ஊழியர், அவர்களிடம் போய் " நீங்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் வீட்டில் இல்லாததால், அவர் இருக்கிற இடத்திற்குச் சென்று, உங்களுடைய கோரிக்கைகளை, கருத்துக்களைச் சொல்லுங்கள், இன்ன இடத்தில் இருக்கிறார், வீட்டுக்கு வரக் கூடாது " என்று சொல்லியிருக்கிறார் இந்தச் சம்பவம் தமிழகத்தினுடைய அரசியல்